செ.வெ.எண்: 07 நாள்: 01.09.2016

## பத்திரிகைச்செய்தி

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க குறைந்தநீரில் அதிகபரப்பு சாகுபடி செய்திட உதவும் உன்னத திட்டமான நுண்ணீர் பாசன திட்டமானது தமிழக அரசால் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. இயற்கை நீர்வளம் குறைந்து கொண்டேவரும் இந்த சூழலில் இத்திட்டத்தின் மூலம் 40 முதல் 60 சதவீதம் நீர் சேமிக்கப்படுகிறது.

பாரத நாட்டில் எந்த மாநிலங்களிலும் இல்லாத வகையில் தமிழகத்தில் மட்டும் சிறு குறு விவசாயிகளுக்கு (100 சதவீத மானியத்தில்) நுண்ணீர் பாசன அமைப்புகள் எக்டர் ஒன்றுக்கு அதிகபட்சமாக ரூ.1 இலட்சம் வரை வழங்கப்படுகிறது. சிறு/குறு விவசாயிகளுக்கு காய்கறி பயிர்களுக்கு 2.5 ஏக்கர் மற்றும் இதர பயிர்களுக்கு 5 ஏக்கர் வரை இலவசமா நுண்ணீர் பாசன அமைப்புகளை தங்கள் நிலங்களில் அமைத்துக் கொள்ளலாம். இதர விவசாயிகளுக்கு 75 சதவீத மானியத்தில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. மத்திய அரசு இத்திட்டத்தை சிறு/குறு விவசாயிகளுக்கு 35 சதம் முதல் 45 சதம் வரை மட்டுமே மானியம் வழங்கிய போதிலும் தமிழக விவசாயிகளின் நலத்தைகாக்கும் வகையில் தமிழக அரசால் 100 சதவீத மானியத்தில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

நடப்பு ஆண்டில் தமிழ்நாட்டில் 46,099 எக்டர் பரப்பில் நுண்ணீர் பாசனம் அமைத்திட திட்டமிடப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் பொது பிரிவு விவசாயிகளுக்கு ரூ.245.56 கோடி மானியம் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி விவசாயிகள் இத்திட்டத்தில் பங்கேற்க முன்னுரிமை வழங்கப்படுகிறது. இதற்காக ரூ. 69.26 கோடி நிதிதனியாக ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டமானது புதுக்கோட்டை மாவட்டத்தில் 492.28 ஏக்கர் பரப்பளவில் ரூ.339.04 இலட்சம் மானியத்தில் செயல்பட உள்ளது. முதலில் வருபவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

இத்திட்டத்தில் பங்கேற்க விரும்பும் விவசாயிகள் குடும்ப அட்டைநகல், கிராமஅடங்கல், கணிணிசிட்டா, நிலவரைபடம், சிறு / குறு விவசாயிகளாக இருப்பின் அதற்கான வட்டாட்சியரிடம் இருந்து பெறப்பட்ட சான்று ஆகிய ஆவணங்களுடன் அருகில் இருக்கும் வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர் /வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தை அணுகி இத்திட்டத்தின் மூலம் பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. மாவட்ட வேளாண் இணை இயக்குநர் 9443169657 (அலைபேசிஎண்), மாவட்டதோட்டக்கலை துணை இயக்குநர் 9443822304 (அலைபேசி எண்) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அளிக்கும் இந்தபொன்னான வாய்ப்பினை பயன்படுத்துமாறு அனைத்து விவசாயிகளும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேற்காணும் தகவலை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**